## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## கும்முடிப்பூண்டி

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 62/2024 | காவல் நிலையம்: பாதிரிவேடு | |
| பெயர் : கஜேந்திரன் | அ.சா.2 | நாள் : 17.11.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.2 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கஜேந்திரன் | தாலுக்கா | : | -- |
| தந்தை பெயர் | : | சிவா | தொழில் | : | தலைமை காவலர் |
| கிராமம் | : | -- | வயது | : | 43 |

( எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது பாதிரவேடு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.10.2023 ம் தேதி இரவு 10 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் முருகவேல், நான், தலைமை காவலர் 596 மணிகண்டன் ஆகியோர்கள் மாதர்பாக்கம் பஜாரில் வாகன சோதனை செய்து கொண்டிருந்தோம். அப்போது ஒரு நபர் பைக்கில் வந்து கொண்டிருந்தார். மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் நாங்கள் வாகன சோதனை செய்தோம். அப்போது அவரிடம் வாகனத்திற்குண்டான ஆர்சி, லைசன்ஸ், இன்சுரன்ஸ் கேட்டபோது அவர் எங்களை பொது இடத்தில் ஒத்தா தேவிடியா பையா நீங்க என்ன பெரிய மயிரா உங்களுக்கு இதே வேலையா போச்சு என்று சொல்லி பக்கத்திலிருந்த கட்டையை எடுத்தார், அதை நாங்கள் பிடுங்க சென்றோம். அப்போது அவர்அங்கிருந்து பைக்கில் சென்று விட்டார். பிறகு ஜெபக்குமார் மற்றும் ஏழுமலை என்ற இரண்டு நபர்கள் வந்தார். அவர்களிடம் மேற்படி நபரை பற்றி விசாரித்தபோது அவரது பெயர் அவரது பெயர் தியாகு த/பெ. நாகராஜ் எனவும் என்எஸ் நகரை சேர்ந்தவர் எனவும், தெரிவித்தனர். அதன் பின்னர் இரவு 11.30 மணிக்கு மேற்படி முருகவேல் காவல் நிலையத்திற்கு சென்று தகவல் அளித்தார். மேற்படி சம்பவம் தொடர்பாக மேற்படி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் மாரிமுத்து என்னை விசாரணை செய்தார். மேற்படி நபரை என்னால் அடையாளம் காட்ட முடியும். ஆஜர் எதிரி தான் அந்த நபர் ஆவார். எதிரி பயன்படுத்திய உருட்டு கட்டை மற்றும் இருசக்கர

வாகனத்தை என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள உருட்டு கட்டை மற்றும் இருசக்கர வாகனம் தான் எதிரி பயன்படுத்திய பொருட்கள் ஆகும். அவை ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ தினத்தன்று இரவு 10.30 முதல் 11 மணியளவில் வாகன சோதனைக்கு சென்றோம். அங்கு எத்தனை வாகனங்களை தணிக்கை செய்தோம் என்றால் 4 வாகனங்களை தணிக்கை செய்தோம். அந்த 4 வாகனங்கும் இரு சக்கர வாகனங்கள் ஆகும். உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் எத்தனை வழக்குகள் பதிவு செய்திருப்போம்என்றால் ஞாபகமில்லை, சம்பவத்தின்போது எத்தனை பொது மக்கள் இருந்ததிருப்பார்கள் என்றால் ஞாபகமில்லை. வாகன தணிக்கைக்கு புறப்படுவதற்கு முன்பாக அது பற்றிய விவரத்தை பொது நாட் குறிப்பேட்டில் குறிப்பி்டிடு தான் வந்தோம் என்ாறல் சரிதான். வாகன தணிக்கைக்கு நான் எனது இரு சக்கர வாகனத்திலும், உதவி ஆய்வாளர் அவரது இரு சக்கர வாகனத்திலும், மற்றொரு நபர் அவரது இரு சக்கர வாகனத்திலும், தனித்தனியாக சென்றோம். வாகன தணிக்கையின் போது தனது கணவர் பிரச்சனை செய்வதாக ஒரு பெண்மணி புகார் அளித்தாரா என்றால் இல்லை. வாகன தணிக்கை செய்த இடம் கண்காணிப்பு கேமரா அமைந்துள்ள இடம் என்றால் ஞாபகமில்லை. ஆஜர் எதிரியை சுமார் 10 நிமிடங்கள் விசாரணை செய்திருப்போம். அவர் விசாரணை செய்த பின்னர் தான் ஏழுமலை ஜெயக்குமார் ஆகியோர் அங்கு வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். அப்போது இருட்டாக இருந்தது என்றால் இல்லை வெளிச்சமாக தான் இருந்தது. மின்கம்பத்திலிருந்து வெளிச்சம் இருந்தது. அந்த மின்கம்பம் டியூப் லைட்டா அல்லது எல்இடி யா என்றால் அது பற்றி ஞாபகமில்லை. அந்த வெளிச்சத்தில் அருகிலிருந்து பார்ப்பவர்களை மட்டும் தான் பார்க்கமுடியும் என்றாலும் தூரத்திலுள்ளவர்களை அடையாளம் பார்க்க இயலாது என்றாலும் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடம் தார்சாலை என்றால் இல்லை சிமெண்ட் சாலை ஆகும். அங்கு தரையில் எந்த பொருட்களும் இல்லை என்றால் சரிதான். நானும் தலைமை காவலர் 596 இருவரும் சம்பவ இடத்திலேயே தொடர்ந்து பணியில் இருந்தோம், உதவி ஆய்வாளர் மட்டும் காவல் நிலையம் சென்றார். சம்பவத்தை பொது மக்கள் யாரும நேரடியாக பார்க்கவில்லை

என்றால் சரிதான். நான் அன்று பணியில் இருந்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ தினத்தன்று வாகன தணிக்கைக்கு செல்லவில்லை என்றாலும் உயர் அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க எதிரிக்கு எதிராக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– கஜேந்திரன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2025.11.17 13:10:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி